மறைக்கல்வி ஞாயிறு செய்தி - 21 செப்டம்பர் 2014

இலக்கு : “துணிவுடன் இருங்கள்! நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்” (யோவான்: 16 : 33)

உயிர்த்தெழுந்த இயேசுவின் சமாதானம்!

இன்றையச் சூழலில் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் ஒரு ஒளிமயமான, அழகிய உருவாக்கம் மற்றும் மனித நேயத்தை நமக்கு படம் பிடித்துக் காட்டுவதாக தெரியவில்லை. மதத்தை பெரும் அளவிற்கு இழுத்துச் செல்லும் போக்குகள், இன ரீதியாக இஸ்லாமிய மாற்றம், ‘அல்லாஹ்’ என்ற பயன் பாட்டுப் பிரச்சனை பல்வேறு வடிவங்களில் முறையற்ற வழிகளில் நடக்கும் அநியாயங்கள் போன்றவை சுனாமிப் போல் பயம், எதிர்மறையானச் சந்தேகங்கள் மற்றும் நிச்சயமின்மையை ஏற்படுத்துகின்றது. இந்த எதிர்மறையான உணர்வுகளால் இயக்கப்படும் நாம், இவற்றில் ‘கடவுள் எங்கே இருக்கிறார்? கடவுளின் அரசாட்சி எங்கே?’ என்ற ஒரு கேள்வி நம்மில் ஏமாற்றம், அவநம்பிக்கை மற்றும் மனக்கசப்புக்களுக்கு நம்மை இட்டுச் செல்லுகிறது.

இயேசு தம் சீடர்களுக்கு மென்மையான வாழ்க்கைப் படக்கோட்டம் இருப்பதாக உறுதியளிக்கவில்லை மாறாக இன்னல்கள், துன்பங்கள், தியாகங்கள் நிறைந்த வாழ்க்கையே இருப்பதாக எச்சரித்தார். புனித யோவான் நற்செய்தி, அதிகாரம் 16-ல் இயேசு அப்போஸ்தலர்களுக்கு ஒரு துணையாளரை வாக்களித்தார். பரிசுத்தத் தூய ஆவியார். உண்மையை நோக்கி வழிநடத்தும் தூய ஆவியார் தீயச் சக்திகளைத் தைரியமாக எதிர்க்கொள்ளவும் இருளின் ஆதிக்கத்தை

வெற்றிக்கொள்ளவும் நமக்கு துணையாக இருக்கிறார். தீயச் சக்தியின் ஆதிக்கம் அவர்களை அச்சுறுத்தி அடிமைப்படுத்தாமல் அவர்கள் அதனை வெற்றிக்கொள்ளத் தூய ஆவியார் துணை நின்று வழிநடத்துவார். அப்போஸ்தலர்கள் தைரியாமாக நன்மையே இறுதியில் வெற்றிக்கொள்ளும் என்ற உறுதியான நம்பிக்கையில் நிலையாக நின்று இருளின் சக்தியை மேற்கொள்ள முடியும்.

இன்றையக் காலத்தில் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, தீயச் சக்திகளை அவர் வெற்றிக் கொள்வார் என்று நமக்கு உறுதியளிக்கிறார். அவரது மரணம் மற்றும் உயிர்தெழுதல் மூலம் தீமையின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து பாதுக்காப்பார். நம்மை அழைத்து, தேர்வுச் செய்து, அனுப்பும் போது கடவுள் நமக்கு கோழையுள்ளத்தினை அன்று, வல்லமையும், அன்பும், சுயக் கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார் (2திமோ ; 1:7) மற்றும் நமக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்தி (2 திமோ ; 1:6) உறுதியான விசுவாசத்தில் (1யோவான் ; 5:4-5) ஆழப்படுத்துவார். அன்பு, மன்னிப்பு மற்றும் உண்மையான நட்பு போன்றவைகளால் வெறுப்பு, பகைகளைக் கடந்து நாம் நீதி, அமைதி, கலாச்சார இடையேயான மத புரிந்துணர்வையும் அடைகின்றோம். நாம் பெரிய ஒரு குடும்பமாக அனைத்தையும் உருவாகிய ஒரே கடவுளைக் கொண்டு இருக்கின்றோம்.

குடும்பம், ஒரு குட்டித் திருசபையாக இருந்து பிள்ளைகளுக்கு நீதி, அன்பு, அமைதி, நற்செய்தி மதிப்புகளை நன்கு பயிற்றுவிக்கும் பள்ளியாகவும் ஆழமாகக் கிறிஸ்துவில் வேருன்றி வளரவும் பெரும் பங்காற்ற வேண்டும். இத்தனைச் சவால்களையும் எதிர்கொள்ளும் நவீன குடும்பங்களின் பெற்றோர்களிடத்தில்,. பெற்றோர்கள் தங்கள்

பிள்ளைகளுக்கு கடவுள் அரசாட்சியின் உடனிருப்பை உணரச் செய்யவும் பிள்ளைகள் தைரியமாக பயனற்றப் போக்குகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு, உண்மைக்குச் சாட்சி பகறவும் கடவுளின் அரசாட்சியை இங்கே இப்போ உணர இயேசு தம் தொடர்ச்சியான உடனிருப்பையும் துணையையும் உறுதியளிக்கிறார்.

உங்கள் அனைவருக்கும் மறைக்கல்வி ஞாயிறு வாழ்த்துகள். உயிர்த்தெழுந்த இயேசுவின் வாக்குறுதியின்படி ‘இதோ! உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’ என்றார். விசுவாசம், நம்பிக்கை மற்றும் உள்ளன்பு ஆகியவற்றில் இறைவன் உங்களை ஆசிர்வதிப்பாராக.

தயாரிப்பு:

அருள்தந்தை ஜோன் ஆனந்தன்

(சிபு மறைமாவட்டம்)

மறைக்கல்வி ஞாயிறு 2014 - யை எப்படி கொண்டாடுவது?

இங்கு தேர்வு செய்யவும், பரிந்துரையாகவும் 7 வழிமுறைகள் இருக்கின்றன.

1. திருப்பலி முன் அல்லது நற்கருணை திருவிருந்துக்கு பின் இறைவார்த்தையை மேற்கோள் காட்டி பவர் பாயிண்டில் காட்டலாம்.
2. பெற்றோர்களின் உதவியுடன் பாடல், நடனம், இசை என படைப்புகள் செய்யலாம்.
3. நம்பிக்கைக் கூறுகளை கொண்ட கண்காட்சி எ.கா. புனிதர்கள், தியாகிகள் மற்றும் பிற படைப்பாற்றல்
4. பெற்றோர் மற்றும் பிள்ளைகள் புனித ஆராதனையில் ஒன்றாக கலந்துக் கொள்ளச் செய்யலாம்.
5. ஒரு பெற்றோர், ஒரு பிள்ளை அல்லது புதிய மறைபோதகர் சாட்சிகள் மற்றும் பகிர்தல் செய்யலாம்.
6. திருச்சபை - பெற்றோர்கள் இணைந்து காலை உணவு விற்பனைச் செய்யலாம்.
7. மாவட்ட அளவில் கொண்டாட்டம்.

.